முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1167

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.12.2022**, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார மகா சூட்சும தவசியே
ஓங்கார குடில்படைத்த மாதவராஜனே
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே உமக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 23 ம் நாள் 09.12.2022, வெள்ளிக்கிழமை)
2. ஆற்றல்பட அரங்கன் உன் தவபலம்
அகிலத்தில் பூர்த்திகொள்ளும் காலம் அனுகிவர
மாற்றம் சடுதி இந்த வையகம் காணுமப்பா
மாதர்மம் இந்த உலகத்தையே ஆளுமப்பா
3. அப்பனே அரங்கனே உனை நாடி வரும்
அன்பர்களைக்கொண்டே இந்த மாற்றத்தை
சுப்பன் யான் இனிதே நடத்துவேன்
சூட்சும சக்தி பல வழங்கி அருள் புரிவேன்
4. அருளாக ஆற்றலாக அரங்கன் உமக்கு
சர்வபலம் தந்து ஆறுமுகன் யான் பெருந்துணை புரிய
மாற்றம் அரங்கன் உன் அவதாரத்தின் நோக்கமாக
மண்ணுலகம் கண்டு மகிழநேரும்
5. நேர்மை கொண்ட அன்பர்களெல்லாம்
நீதிமான் உன்னை தேடி வந்து நிலவுலகில் தர்மத்தை கையில் எடுத்து பெருமைமிக்க
ஞான ஆட்சிக் காலமாக பெரும் தலைமைகள் கொண்ட
ஆறுமுகன் என் ஆளுமையாகவே அற்புதம் இந்த உலகம் காண நேரும்
6. நேர்மைபட சத்தியவான்கள் பலரையும் தர்மவான்கள் பலபேரையும்
ஞானவான்களையும் ஞானிகளையும் உன்பால் ஒன்றிணைத்து
ஞானபண்டிதன் யான் இந்த அற்புதத்தை நடத்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–